40

உ

# மாவைக் கந்தசாமிபேரில்
# பக்திரசக் கீர்த்தனைகள்



மயிலிட்டி

ஸ்ரீ சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

அவர்கள் இயற்றியது.

மயிலிட்டி பெரும்பரப்பு ஸ்ரீ விக்னேஸ்வராலயத் திருப்பணிநிதி

294.53 VEL

உ

சிவமயம்.

மாவைக்கந்தசாமிபேரில்

# பக்திரசக் கீர்த்தனைகள்.

இஃது

யாழ்ப்பாணம், மயிலிட்டி

ஸ்ரீ. சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்

அவர்களால் இயற்றப்பட்டு

அவர்மாணுக்கர் சிலரால்

வெளியிடப்பட்டது.

விபவஞ ஆடிமீ

1928.

(*Copyright Registered*)

யாழ்ப்பாணம்

கிளவ் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

கடவுள் துணை.

# சிறப்புரைகள்.

சுன்னாகம் காவியபாடசாலைத் தலைமைத் தமிழாசிரியரும்
வித்துவானுமாகிய
பிரமஸ்ரீ. சி. கணேசையரவர்கள்
இயற்றியது.

பாவைக் குகன்மேன் மகிழ்கீர்த் தனங்கள்செய்தான்
ஆர்வமொடு யாரு மமுதிணை—நாவலனின்
மிக்க கவிமொழிவேற் பிள்ளையெனு மாசிரியன்
தக்கமயிலைப் பதியோன் றான்

---

சுன்னாகம் ஸ்ரீ இராமநாதவிதாலயத்
தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீ. ச. பொன்னம்பலபிள்ளை
அவர்கள் இயற்றியது.

பொன்னிவளந் தருநாடு பொற்புறச்செங் கோல்செலுத்திப் போற்றி யுற்ற
சென்னிமகள் பரிமுகத்தை மனுமுகமாய்ச் செய்தகனித் தீர்த்த மொன்றே
கன்னியவள் வரவழைத்த காங்கேச மூர்த்தியுளங் கருதி வந்து
மன்னினவர் வினைதீர்க்குந் தலமுமென மூன்றதிக மாவை தன்னின்.

சுரதமுடன் லீலைகளுந் தோகையர்க ளிருவரொடுஞ் சூழ்ந்து செய்யா
வரதமுட னபயகரந் தந்துவைகு மாறுதிரு வதனன் றன்மேல்
விரதமுடன் பத்திமையுமிகப்பழுத்துத் ததும்புமன்பு விழுங்க முன்னிச்
சுரதமுடன் கீர்த்தனைப்பா மாலைசெய்தா னவனையிவண் சாற்று கிற்பேன்.

அந்தவருங் குலமுதல்வ ராண்டமயி லிட்டியின்க ணமருஞ் சீலன்
உந்தமுடி தொட்டதனி வேளாள னவன் குலத்தோர்க் குரைத்த பட்டம்
முந்தவுறுங் கனகதண்டி கைக்கனக நாயகன் முதலி யென்பர்
பிந்தவழி தவறாமல் வாழையடி வாழையென்னப் பிறந்த செம்மல்.

பன்னூலிற் சாதுரியன் சுன்னையமர் முருகேச பண்டி தன்பால்
முன்னூல்க ளாயறிஞன் கலைபயிற்று மாசிரியமுதன்மை பெற்றோன்
அந்நூல்க டேர்சாமி நாதப்பீ.ஏயினர்சிற் றரிய தந்தை
பின்னூல்க ளினுமியற்றத் திருவருளைப் பெறும்வேலுப் பிள்ளை தானே.

---

யாழ்ப்பாணத்து நவாலியூர்,

தமிழ்ப்பண்டிதர்

## திரு. க. சோமசுந்தரம்பிள்ளை

அவர்கள் இயற்றியது.

அருவாகி யுருவாகி யருவுருவா யுலகமெலா மாகி வேறாய்க்
கருவாகியுயிர்க்குயிராய்க் கரந்திருக்கு மிறைவனுளங் கனிய முன்னாட்
குருவாகி மறைமொழிந்த குமரநா யகன்மாலை குலவு மன்பர்
திருவாகி யமர்முருகன் கழல்பரவிச் செழுந்தமிழால் தீங்கு நீங்க.

பண்ணோடு மிசையோடும் பரிவோடுங் கவிமாலை பகர்ந்தா னோங்கு
விண்ணோடு கருவிமுகில் விழைவோடு துயில்கூரும் விரையார் சோலை
கண்ணோடு செழுஞ்சாலி கரும்போடு தலைமயங்குங் கழனி சூழ்ந்து
தண்ணோடு பலவளமுந் தழைவோடு பயின்மயிலைசார்ந்து வாழ்வோன்

வண்டிசைக்கும்பொழிற்றெல்லிமுடிதொட்ட வேளாளர் மரபிற் செம்பொற்
றண்டுகைக்குங் கனகநா யகமுதலி யார்வழியிற் றழைத்த செம்மல்
எண்டிசைக்கும் புகழ்பரப்பும் முருகேச பண்டிதர்பா லி னூல் கற்றோன்
கண்டிசைக்கும் மொழிச்சின்னத் தம்பியருள் வே றபிள்ளை கலைவலோனே.

எந்தையினி தடியவர்கட் கிருமையுமீந்தருள்முதல்வ னிமையோர்போற்றுந்
தந்தையினி தாயதமிழ்ப் பாவலர்க்குத் தாயெனையுந் தடுத்தாட் கொண்டு
முந்தைவினைப் பவமறுக்குங் கலபமயின் முருகன்மேல் மொழிந்த பாக்கள்
சிந்தையினி லருள்பூத்துச் செவியினிலின் னிசைபூத்துத் திகழு மம்மா.

மற்றவற்றிற் சிலவெடுத்துத் தமிழுலக மோதிவினை மாசு நீரக்
குற்றமிலா தெழுதாத வெழுத்தினிலே பதிப்பித்துக் கொடுத்திட் டானால்
சொற்கவிப் புலவனுக்கு மாணவனுப் மகன்முறைமை தொடர நின்றோன்
கற்றவமே யுருவான சுவாமிநா தப்பெயர் கொள்நாவலோனே.

---

தெல்லிப்பழை மகாஜன
ஆங்கில வித்தியாசாலைத்தலைமை ஆசிரியர்
## ஸ்ரீமாந் தெ. அ. துரையப்பாபிள்ளை.
அவர்கள் இயற்றியது.

சீர்கொண்ட சொற்சுவை பொருட்சுவை யிரண்டுஞ்
செறிந்து மெய்ப்பத்தி யிரசத்
தெவிட்டாத தேனொழுகு கீர்த்தன மாலையெத்
திருவுநிறை தொன்மை நவராம்

பேர்கொண்ட வருண்மாவை வாழ்கந்த வேண்மீது
பெட்புடன் புனைதல் செய்தான்
பெருமானை யனவரத மடியவர்கள் துதிசெய்து
பேறு பெற்றுய் கெனவே

ஏர்கொண்ட மயிலையிற் காராள ருயர்வமிச
வேந்தல் சின்னத்தம்பி மன்
னீன்றிடு தபோபலஞ் செந்தமி ழிலக்கண
விலக்கியக் கரைகண்டவன்

பார்கொண்ட பாக்கியம் யாவினும் மேலாய
பண்ணினிசை தேர்பண்டிதன்
பத்திநிறை வேற்பிள்ளை யாசிரிய னென்னுமிப்
பார்மெச்சு புலவரேறே.

---

யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாசசபை நாடகக் கவிஞரும்
சங்கீத வித்துவானுமாகிய

## வண்ணை. ஸ்ரீ. வை. இராமநாதன்.

அவர்கள் இயற்றியது.

திருமரு மயிலைப் பதிவதி வேளாண் திலகனு யவதரித்துள்ளான்
கருதரு கனக தண்டிகைச் சிறப்புக் கனகரா யப்பெயர்முதலி
மருவரு மகுடந் தொட்டவே ளாளன் வழிதனி லுதித்தமாதோன்றல்
பொருவரு குமார சுவாமியாஞ் சன்னைப் புலவனே இறகலைபயின்றோன்.

சத்சனர் மெச்சும் பிரபுவா மறிஞன் றனிப்பெருந் தகைமைசார்ந்துள்ளான்
நற்சன சமூகத் தலைவனென் னண்பன் நவையிலாச் சாமிநாதப்பேர்
உற்றவன் றனக்குச் சிறிய நற் றந்தை யொடுகுருவாகவேயுள்ளோன்
செற்றமில் சின்னத் தம்பிபெற் றெடுத்த செய்யவேற் பிள்ளையாசிரியன்.

என்னகக் கோயில் கொண்டசெந் தூரி லெந்தைபா லன்புமீதூர
மன்னிய மாவைப் பதிதனைப் போற்றி மங்கல கீதங்களுரைத்தான்
இன்னிசை யிராக தாளமோ டெண்ணு மெவ்வகை யமைதியுமேற்பக்
கன்னிநா டதனிற் றமிழ்வளர் சங்கக் கற்றவர் தாமுமெச்சிடவே.

கலிபின்மே லையா யிரத்தொடு மூப்பான் கலந்திடு விபவவற்சரத்தில்
நலிவிலாக் கீதத் தமிழினை மெச்சி நாட்டினேன் நானுமோர்சாற்று
வலியுறு பரிதிக் கெதிரிலோர் தீபம் பற்றியே விளக்குவார்பே ல
ஒலிகட லுலகோ ருவகையே யன்றி யுவர்த்திடா ரெனமனமுன்னி.

---

வண்ணைநகர் தமிழ்வித்துவான்

## ஸ்ரீ. க. வைத்தியலிங்கப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

சீரேறு மாவைநகர்ச் செங்கதிர்வேற்
குகன்மீது செப்ப யாரும்
ஏரேறு கீர்த்தனைப்பா வெழிலலங்க
ரெடுத்தளித்தான் மயிலைவாசன்
தாரேறு புயச்சின்னத் தம்பிசேய்
நாடகமாந் தமிழில் வல்லோன்
காரேறு கரதலத்தான் வேற்பிள்ளை
யாசிரியன் கவிஞ ரேறே.

---

யாழ்ப்பாணம்
பரமேஸ்வரக் கல்லூரித் தமிழ்ப்பண்டிதரும்,
'உலகியல் விளக்கம்'' என்னும்
பெருநூலாசிரியரும், மாவைவாசருமாகிய
ப்ரமஸ்ரீ. கே. சு. நவநீதகிருஷ்ண பாரதி
அவர்கள் இயற்றியது

படிதொட்டுப் பண்புருற்றி வயலாக்கிப் பயிர்செய்து பாராள் வோர்தம்
முடிதொட்டுத் திருநல்கும வேளாள குலதிலகன் முக்கண் மூர்த்தி
அடிதொட்டுப் பணிந்தேத்தி யறம்பலவு நிலைநாட்டி யருளை யீட்டிக்
கொடிதொட்டுப் பெருந்தமிழ் வளர்த்தற்குப் பிடித்தகொடிக் கோமான் மாதோ.

ஆழ்கடல்சங் கலைவீசும் யாழ்ப்பாணத் தெல்லிநகர்க் காவி போன்று
வாழ்கனக தண்டிகையார் கனகநா யகமுதலி மரபின் றீபம்
சூழ்சுன்னைக் கற்பகமா முருகேச பண்டிதன்றாள் சொல்லப் போற்றித்
தாழ்பிரியன் அக்குமர சாமியொடு கவிச்செல்வந் தழைய சீமானே.

வேறு.

ஏற்ற பார்மயி லிட்டியில் வாழ்பவன்
சாற்று பேர்சின்னத் தம்பிவேற் பிள்ளையாத்
தோற்று பாவலன் றொல்லைத் தமிழ்க்குறை
மாற்று வாய்மை மலிந்த வரதனே

பூவை வள்ளியின் புன்னகை பேணியே
மாவை வாழ்குகன் மாணடி பாடவே
நாவை யெற்கரு ளுதன்மேற் கீர்த்தனப்
பாவை யாயிரம் பாடியுய்ந் தானரோ

உருகு பத்திக்கு மொண்டமிழ்த் தீஞ்சுவை
பருகு மார்வத்துப் பான்மைக்கு மின்னிசை
பெருகு காதற்பெ ருக்கினுக் கும்மிடந்
தருமிஃ தென்ப தமிழ்தெரி வாணரே.

## IV

### யாழ்ப்பாணம், வயாவிளான்,
### பத்திராதிபர் ஸ்ரீ, க. வேலுப்பிள்ளை
### அவர்கள் இயற்றியது

குறமகளைத் தெய்வதயா னையையமணந்தான் நம்மில்முன்பு குலாய காம
மறமழிக்குஞ் செகத்திலுறும் வன்கொடிய பிணியழிக்கும் வல்லான் கோ
[லச்
சிறகடிக்கும் மயினடிக்கும் மாவைநகர் வைகுருகன் சேந்த னன்பைப்
பெறவடித்தாள் பணிந்துபல கீர்த்தனத்தைச் சொன்னானார் பேசக் கேண்
[மோ

என்னரிய கண்மணியை யன்னநண்பன் யாழ்ப்பாண மியாண்டுஞ் சாதிப்
பொன்னெனப் போற்றும்மயிலைப் புரத்திலுயர் வேளாள புமான் சிறீமத்
சின்னவரந் நாளுனுற்று தவக்கிறுதச் சூனுவெனத் திகழுஞ் சீர்த்தி
மன்னரிய தமிழறிவி லுவரியெனப் புலவரஞ்சி வணங்கும் வல்லான்.

பஞ்சலக்க ணந்தருக்கங் காவியமா கமம்புராணம் பதினூ லொடு
நெஞ்சுருக்கிப் பாவசத்தை யளித்திடுஞ்சங் கீதகலா நிபுணன் றேர்ந்த
மஞ்சுடைவேற் பிள்ளையிவன் கவிநலத்தை யான்வியத்தல் வலிய யானை
அஞ்சுசிங்கந் தனக்குநரி கட்டியபட் டம்போலென் றார்சொ லாரே.



உ

சிவமயம்.

கணபதி முன்னிற்க
வேலும் மயிலுந் துணை.

## விநாயகஸ்துதி.

வெண்பா.

எத்திசையும் போற்று மெழின்மா வையிலெவருந்
துத்தியஞ்செய் கந்த சுவாமியின்மேல்—பக்தியுடன்
கீர்த்தனைகள் பாடக் கிருபைபுரி வாய்பரம
மூர்த்திதரு மானைமுக வா.

## மயிலை விநாயகஸ்துதி.

வெண்பா.

சீர்த்தியணி மாவைச் சிவசுப் பிரமணிய
மூர்த்திபதம் பாட முழுதுலகும்--ஏத்துச்
சிதமா மயிலைத் திருப்பதிவா ழானை
வதனனென் னுள்ளத்தில் வா.

## கீர்த்தனம்.

இராகம் சங்கராபரணம். தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

மயிலையம்பதி வாழ்ந்திடும்
மதகயமுக மாமு கேஸ்வரா
மயிலையம்பதி வாழ்ந்திடும்.

அனுபல்லவி.

கயிலையங்கிரிக் கடவுளிணைக்
கன்றன்பர்க் கொன்றுங்கன்
மம் பொன்றத் தன்மஞ் செய் மயிலை.

சரணங்கள்.

க. ஆலடியினி லங்கரன்
அகமகிழ்ந்தெமக் கருள்செய்யும்பரன்
ஆலடியினி லங்கரன்
ஏறுமூஷிக மேறிவருநாதன்
ஏரம்பன் மாதங்கற்
கூரம்பென் றோர்கொம்பன் மயிலை.

உ. அண்டர்க்கரும் பராபரன்
அடைந்தவர்க்குமுன் வருங்கிர்பாகரன்
அண்டர்க்கரும் பராபரன்
தொண்டர்க்கனந்த சுகஞ்செய்விநாயகன்
தங்கக்கண பதியார்தரு
கங்கைக்கொரு புதல்வாதிரு மயிலை.

ங. மன்றினிருத்தம் புரிந்தவன்
மதிக்கரதமச் சரிந்தவன்தங்க
மன்றினிருத்தம் புரிந்தவன்
சென்றெவைகட்குமு னின்றிடுநாயகன்
சீரீந்த்சற் காறுந்தச்
சேறுப்புட் கோலங்கொள் மயிலை.

# மாவைநகர்க் கந்தசுவாமிபேரிற் கீர்த்தனைகள்.

## சுப்பிரமண்யஸ்வாமி வணக்கம்.

### விருத்தம்.

வார ணத்தவ ஞதியர் வாழமே
வார ணத்தவு ணப்படை மாளவோர்
வார ணத்தையு யர்த்திய மாவைவாழ்
வார ணத்தடி யானை வழுத்துவாம்.

இராகம் காமாஸ். தாளம் மிஸ்ரம்.

### பல்லவி.

1. கந்தஸ்வாமியைச் சிந்தித்துய்வாய் நெஞ்சமே—கோவிற்
கடவைஸ்தல நிதமும்முறை கந்த

### அனுபல்லவி.

வந்தடைந்தவர்க்கு வல்வினைமாற்றிடும்
வரனுறுமு கம்பன்னிரு கரனுயிரு கண்முன்வரு கந்த.

### சரணங்கள்.

க. மாயப்ரபஞ்சப்பொய் வாழ்விதொன்றுந் நிலைபாதே—[வீணாய்
மங்கையராசைவலையிற்சிக்குண்டலையாதே
தேயமுழுதிற்குந் தேவையாய்முன்னிற்குந்
தெய்வானைமு னேர்பெண்டொரு
தெய்வானைபி னேகொண்டருள். கந்த.

உ ஆணவமும்மல முங்கடைத்தேறவிடாது—நாலைந்
தாறுடென்றின்னும ரும்பகையாறக்கூடாது
பூணரவன்பரி பூர்ணசுதன்தெரி
புகல்பெற்றிமை யவராறிய
பகல்வெற்றிகொண் மயிலேறிய கந்த.

௫. கோரமிக்கஎமன் கொண்டோடிப்போகமுன்னேறி— [ஐயன்
கோலத்தைத்தரிசித்துக் கும்பிட்டிதோசரண்சேறி
சூரைத்தாந்தபோர் வீரத்துயர்ந்தவோர்
துரைவேளொயின் மயில்போலொரு
பரைவாழ்கயி லையின்மேல்வரு. கந்த.

௬. மாதாபிதாஎத்தா தாதநவாரரைக்காணி—வல்லே
மாவையிற்போயேதுந் தேவையோசாமியைக்கேணீ
யாதுந்தடைசொல்லார் யாதுந்தாவல்ல
இறையைக்குறு முனிகருடிய
மறையைக்கரு ணைகொடருளிய. கந்த.

---

வெண்பா.

புள்ளிமயி லேறும் புனிதா விழியகுற
வள்ளிமண வாளா வடிவேலா—உள்ளமுடன்
எப்பொழுதுங் கைதொழுவே னென்றுயர்தீர்த் தாள்வாயென்
அப்பனே சுப்ரமணி யா.

இராகம் காம்போதி. தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

2 அப்பனேயென் சுப்ரமண்யா
ஐயனேயெனை யாளுமேசாமி

அனுபல்லவி.

இப்ரபஞ்சத் தப்பைமுந்தத்
தப்பவையிங் கெப்போதும்வந் தப்பனே.

சரணங்கள்.

௧. பந்தப்பாவத் தொந்தத்தாலுட்
பாறியேவே சாறியாறு
வெந்துயர்ப்பட் டெந்தநாளும்
மெத்தவாடி வேகிறேனே அப்பனே.

உ. கானவேடர் கன்னிகைதெய்
வானைகூடு மன்னவாவுன்
காணவரும் ஞானக்கோலக்
காட்சிதாமீ ஞட்சிபாலா. அப்பனே.

ரு. வையகமிங் குய்யவேநன்
மாவைநகர்க் கோவின்மேவுஞ்
செய்யமுரு கையனேயுன்
சேவடிதந் தாள்வடிவேல் அப்பனே.

---

வெண்பா.

மேவற் புதவடிவேல் விட்டவுண ரைத்தெறுமோர்
காவற் கடவுட் கருமருகா—மாவைநகர்க்
கந்தா முருகா கடிதிலெனை யாளவுமை
மைந்தா மயிலேறி வா.

("அவதார புருடன்" என்றபடி.)

பல்லவி.

3. மயிலேறி வருவாய்—அயில்
வாச அருணேச முரு
கேசா மயிலேறி வருவாய்.

அனுபல்லவி.

அயனரி முதல மரருமடிதொழ மயிலேறி.

சரணங்கள்.

க. ஆறுமுகமுமழ கானநல்விழிகளு
மபய வரத கரமாக—மிகச்
சீறுமழுவும் வேலுஞ் சேவலு மயிலுமாய்த்
திகழ் திருக்கோலமதாக—மணச்
செல்வியரிரு புறமாக—ஒயிலாக—அதிவேக—மயிலேறி.

௨. ஆலவாய்க் கரும்பாயோ ரலவாயிற் றுரும்பாய் நா
னலைகிறே னெனைக் கண்ணுற் பாராய்—நாளும்
அஞ்சலி செய்துன் றனைக் கெஞ்சுகிறே னுன்னடிக்
கஞ்சமதை யெனக்குத் தாராய்—சற்றும்
அஞ்சலென் றெனை நிதங்காராய்—தயைகூராய்-துயர்தீர
[மயிலேறி.

௩. மாறுகொண்டு கல்பனை யாறும் வென்றுனதொரு
ஆறுதல் பெறமனதாட—திரு
நீறகண்டிகை புனைந் தாளுறாஞ்செழுத்தொடுன்
பேரை அஞ்சலியொடு கூறத்—திரு
மாளவையை வலஞ்செய்திடேறக்-கதியேற-அதிவிர-மயி
[லேறி

௪. பாரமிதும் ப்ரபஞ்ச பாதகமனந்தமும்
பரிதிமுன் பனியெனவோட—அந்த
காரமடர்ந்த பந்த பாசங்கடினந்தோறும்
கருடன் முன்பணியெனவாட—உந்தன்
பாத பங்கயங்க ளுன்குட-உன்னைத்தேட—துதிபாட—
[மயிலேறி.

---

கலித்துறை.

சரவணப் பொய்கையின் மூவிருதாரகைத் தாயர் தருந்
திருமுலைப்பாலுணுஞ் செவ்வேள் பரமன்சிறுவனெமக்
கரண மென்றெந்த வகிலமுந்தந்த வறுமுகவன்
சரண மிரண்டு மறவாதவர்க் கொருதாழ்வில்லையே.

இராகம் அமிர்தகல்யாணி. தாளம் அடதாளசாப்பு.

பல்லவி.

4. தூவி மயிலின் மீதூருக்—கந்த
ஸ்வாமியைநாளுந் துதித்தன்புகூரும்
தூவி மயிலின் மீதூரும்

அநுபல்லவி.

தாவுஞ்சூரனை மாளச் சாய்த்தருட்டிறங்கொண்டு
தேவர் விண்ணுலகாளச் செய்குணக்குன்று தூவி.

சரணங்கள்.

க. நாரணன் முதலோர்க்கதீதன்—தொல்லை
நான்மறைகளுந்தேடும் ஞானப்பிரக்கியாதன்
நாரணன் முதலோர்க்கதீதன்
வாரணமுயர்த்தவு தாரகுணாகன் னீதன்
வள்ளி தெய்வானைகூட வாழுஞ்சமேதன் தூவி.

உ. செந்தினையிடிக்காசைப்பட்டார்—அன்பர்
தேடிக்கொடுக்கு நைவேத்தியந்தனைத்தட்டார்
செந்தினையிடிக்காசைப்பட்டார்
பந்தவினைகணீக்க பாரின்மாவையிலுட்கார்
பரமனைப் பூசியுங்கள் பழிவரவொட்டார் தூவி

ங. நானைத் துதிப்போமென்பீர் யாரும்—உங்கள்
நானைக்கூற்ற னுண்டிதோ நணுகிறான்பாரும்
நானைத் துதிப்போமென்பீர்யாரும்
வேளைக்கற்புதவடி வேலற் காளாகிநேரும்
விக்கினங்களைத்தீர்த்து மிகுகதிசேரும் தூவி.

---

கலித்துறை.

கந்தனைக் கந்தக் கடம்பணி வேளைக் கடவுட்கங்கை
மைந்தனைக் கண்ணன் மருகனைக் கார்மயில் வாகனனைச்
சிந்தனைக் குட்டெரி சித்திடத்தேடிநந் தீயவினைப்
பந்தனைக் கட்டறுத் தெந்துயர் தீர்த்தருள் பாலிக்குமே.

இராகம் காபி. தாளம் ஆதி.

பல்லவி.

5. மோக்ஷானந்தத்தை நாடு—வேன்
முருகனை நிதந் தேடு ஓ! மனமே
மோக்ஷானந்தத்தை நாடு

அனுபல்லவி.

தாக்ஷாயணிதருஞ் சாமியைக்கூடு
சைவ சமயநெறி சார்ந்துறவாடு  மோக்ஷா.

சரணங்கள்.

க. சாலு முலகமிந்த்ர சால மென்றெள்ளு
தனி மயிலூர்பரன் சரணெனக் கொள்ளு
வேலுமயிலுந்துணை வேறெலாந்தள்ளு
மேவ்வானேமனப்போ வினையும் வீண்சள்ளு  மோக்ஷா.

உ. சுந்தர நான்மறை சொல்வதே சத்யம்
துவழுறுஞ் சரவண பவனடி நித்யம்
இந்திரனுனு மென்ன! அநித்யம்
இகபரமுதவுநா யகற்குச் செய்துத்யம்  மோக்ஷா.

ந. கண்டுழிமாயுமின் கடுத்ததித்திரேகம்
கந்தனைக்கொண்டுவினை கடத்தல் விவேகம்
மண்டுபிணியாயுடல் வருத்துமநேகம்
மாவையிலதற்கொரு மருந்துண்டுயூகம்  மோக்ஷா.

---

வெண்பா.

அல்லல்போம் வல்வினைபோ மன்னைவயிற் றிற்பிறந்த
தொல்லைபோந் தீராத் துயரம்போம்—நல்ல
வளமலியு மாவைநகர் வாழ்சுப்ர மண்யன்
கழலடியைக் கைதொழுதக் கால்.

இராகம் பியாகு. தாளம் ஆதி.

பல்லவி.

6. நாதாவுன் பொற்பாதம் நம்பினேன்
இந்த நானிலத்தி லாதரவில்
லாமல் மெத்த வாடுகிறேன்
நாதாவுன் பொற்பாதம் நம்பினேன்.

சரணங்கள்.

க. ஆதிசிவாகமத் தறிவரும்பொருளே
அடியவர்க்கனுகவொட் டாயகத்திருளே
சோதிவிட்டொளிருப்வேற் றுரையேயென்குருவே
துதிபுரிவேனுனன் கதியேனக்கருளே நாதா.

உ. அத்தியற்புதவடி வானவுல்லாசா
ஆடுமயிலேறிவிளை யாடுமுருகேசா
சித்தமிகவந்தெனை யாட்கொள்ளும்நேசா
தில்லையம்பலத்துளாடுஞ் சிவன்றிருச்சேயா நாதா.

ங. வானுலகினையக்த மகபதிக்கீந்தாய்
மாயமாமலைபையும் வேரறத்தடிந்தாய்
ஈனவேடுவப்பெண்ணை யினிதெனமணந்தாய்
எனையுவந்தருளும்மம் பிகைதருங்குழந்தாய் நாதா.

ச தாவறுஞ்சரவண வாவியில்வளர்வாய்
சம்ப்ரமமிகுமாவை யம்பதியுறைவாய்
ஆவிகடோறுநின் றகிலமுமமர்வாய்
அரியயற்கரியவுன் றிருவருள்புரிவாய் நாதா.

---

கலித்துறை.

அட்ட திசையும் புகழ்வடி வேன்முரு காவெழில்கூர்
மட்டிமிர் மாலை யசைமணி மார்ப மகிழ்வொடுமா
விட்ட புரங்குடி கொண்டருள் வாயென் பிணிநோ
யெட்டுணை யுஞ்சகி யேன்றுயர் தீர்த்தெனை ரட்சிக்கவே.

இராகம் தறுவார் தாளம் அடதாளசாப்பு.

பல்லவி.

7: திருக்கடைக் கண்ணால்
பார்த் தெனை யாளுஞ்
சிவசுப்ர மண் யா.

அநுபல்லவி.

பருப்பதக் கொடியுமை பாலாவுனடியிணைப்
பத்மம் பணியுமெனைப் பாலித்தருளுவாயே திரு.

சரணங்கள்.

க. அறுமுகமிலங்கப்-பன்னிருகைமெத்
தழகாகத்துலங்க
குறுநகையொடுதங்கக் குண்டலங்கடயங்கக்
குலவுமாமயில்வரும் கோலநான்மறவேனுன் திரு.

உ. அந்தணர்புகழத்-தேவர்மாதவர்
வந்தடிபரவ
எந்தாய்தந்தைபோன்மாலவ வந்தாளுன்றனைப்பூவைத
தேத்துவேனெனைப்பாது காத்திடுவாயெப்போதும் திரு

ந. வேதமஞ்சலிக்க-முனிவராசேர்
வாதந்தந்தொலிக்க
ஆதரவொடுவேடர் மாதுகுஞ்சரிகூட
அகிலமுநின்றெனை யாளுஞ்சண்முகனே திரு.

ச. பண்ணவர்பிழைக்கச்-சூரனுதிய
பகைவரைத் தொலைத்த
எண்ணருஞ்சிறைமீட்ட வுன்றலென்றுயர்மாற்ற
வேலுமுன்றிருக்கையில் வேலுமொன்றிருக்கையில் திரு.

ரு. சூர்க்கடல்பருக -வேல்விடுத்தவோர்
துய்யமான்மருகா
பார்க்கிலெனதுபாவந் தீர்க்கவிதென்னவொரு
பாரமோவரப்போகத் தூரமோவுனக்கது திரு.

---

வெண்பா.

அந்தாவுன் றஞ்ச மலதென் றனையருள
வித்தா ரணியி லிலையெவரும்—நித்தமெனை
யாள்வடிவே லாறு முகவா வடியேனுன்
சேவடிக்கீழ் வாழவருட் செய்.

இராகம் கல்யாணி. தாளம் அடதாளசாப்பு.

பல்லவி.

8. மாவைநகர்க் கோவில்வாழ்
தேவாகின் சேவடிக்கீழ்
வாழத்துணைசெய் கந்தஸ்வாமி மாவை.

அனுபல்லவி.

ஆவிகளுக்காவியா யகிலாண்டங்களினிறைந்
தருளுஞ்சண்முகாவெனை யாள்சரவணபவா மாவை.

சரணங்கள்.

க. வந்தனம்புரிதொண்டர் வாழ்வின்மகிழ்தயாளா
வாசவன் மகளைமுன் மணந்தபன்னிருதோளா
சந்ததமயிலேறிச் சாரிவருமெய்யாரா
சாரதர்நந்திகணத் தலைவர்சூழ்தரும்வீரா மாவை.

உ. வாடாதநீபமலர் மாலையசையுமார்பா
வரநதிமைந்தாவானோர் வணங்குங்கிருபாகரா
கோடாததிரிசூலங் குலவுஞ்சிவகுமாரா
குன்றமெறிந்தவெற்றிக் குளகாவள்ளிமணாளா மாவை.

ந. தாரகையாறுதாய்மார் தருமுலையுண்டபாலா
தையன்மீனாட்சியம்மை தந்திடுந்தண்டைக்காலா
சூரபதுமனுடல் துளைத்தசெங்கதிர்வேலா
சுப்ரமணியாதுதி தோற்றுமெய்ஞ்ஞானகோலா மாவை.

வெண்பா.

ஆடுமயி லேறுமுரு கையாவிண் ணுளிசுர
ரோடுகுடி யேறவரு ளும்பர்பிரான்—மாடிவரு
நஞ்சணியுங் கண்டர்சுத நம்பாவுன் றஞ்சமிக
வஞ்சலென வந்தெனையாள் வாய்.

இராகம் காமாஸ். தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

9. தஞ்சமாயடிக் கஞ்சந்தந்தாளையனே—மாவைத்
தலநின் றருள்சரவணபவ தஞ்சமா.

அநுபல்லவி.

தஞ்சமென் றவரை யஞ்சலென்றோர்தயை
தருவாயுன திருதாளடணி
தமியேனுறு துயர்தீரொரு தஞ்சமா.

சரணங்கள்.

க. அஞ்சுமுகத்தினர்க் காறுமுகந்தரும்வேலா—என
தப்பனேயொப்பில்லாத் தற்பரனேயுமைபாலா
அஞ்சுமுகன் றந்த வாறுமுகத்தேவா
அயனைச்சிறை யதில்வைததுல
கருளுத்தம வருள்வைத்தொரு தஞ்சமா

உ அஞ்சுகமென்மொழிக் குஞ்சரிவள்ளிமணுளா—அதி
யற்புதனேபரி சுத்தனேநித்யதயாளா
வஞ்சரஞ்சுஞ்சேவன் மயிலேறுய்யாரா
மறையைத்தமிழ் முனிவற்குரை
சிவசுப்பிர பணியத்துரை தஞ்சமா

ங. இந்திரர் வானவர் சந்திரசூரியர்போற்ற—உல
கெங்குநிறைந்தருள் பொங்கச்சுரர்குடியேற்ற
அந்தம்யாதொன்றுனு மாகாதென்றோர்கால
மமராடியவசுரன்மிகுதமரோடறவடல்செய்குக தஞ்சமா.

வெண்பா.

ஐயா முருகா வனைத்தும் படைத்தவருட்
கையா கடம்பணியுங் கந்தா வுன்—செய்யதிரு
பாதம் பணிவேனைப் பாதுகாத் துன்னருட்பா
சாதந் தருவாய் சரண்.

இராகம் செஞ்சுருட்டி. தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

10. கந்தாவேனை வந்தாடிருக்கோலம்
கண்கள்களிக்கநான் காணுவதெக்காலம் கந்தா.

அநுபல்லவி.

சந்ததமாவைவ திருதருரூப முருகையா
தாவுமணிமயில்வாகனமேறித் தயங்குபன்னிருகையா
இந்திரர்வானவ ரேத்திவணங்கிடும்
ஏகனேமாதுமை பாகனருளிய கந்தா.

சரணங்கள்.

க. அரியயன்கூட வறியோணாததிதூரம்
அண்டிப்பணிந்திடுந் தொண்டர்க்கென்றுல்வந்தங்
கருள்செய்வாய் நொடிநேரம்
சரவசரமுந் தந்ததயாபரா
சார்தமியேற்குந்நீ தானலோதாபரம் கந்தா.

உ. சதுர்முகன்மறை விடைகொடான்மயலேறத்
தாக்கிச்சிருஷ்டித்த பாக்யமேயுன்னிழல்
தருகுவாயிளைப்பாற
வதுவைசெய்திடும் வள்ளிபங்காளனே
வந்தவினையறுத் துய்ந்திடவந்தருள் கந்தா.

ங. அம்பொன்மவுலியுங் குண்டலமுமுகமாறும்
ஆறிருகைகளும் வேலுமயிலுமென்
றடுத்திடிற்பவமாறும்
வெம்பியசூர்ப்படை வீட்டியவேற்படை
நம்பியேயுன்னையெந் நாளுமறவேனுன் கந்தா.

வெண்பா.

ஆனை முகனுக் கருந்துணைவா வன்புமிகும்
வானவருக் குத்தலைவா வல்லவுணர்—கோனைச்
சமரிற் செயித்த தனிவேலா மாவை
யமர்சுப்ர மண்யா வருள்.

(மோகலாகிரி என்றபடி.)

இராகம் காம்போதி. தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

11. சோதிமாமயின்
மீதிலேறியேன்
ஸ்வாமிநீவாராய்.

சரணங்கள்.

க. சோதியெனும் ப்ரபை யானசொரூபாவெண்
தோஷமெல்லாந்தொலைப் பாய்சுடர்வேலோனே சோதி.

உ. ஆதிசிவன்சுத ஞமறுமாமுகா
ஆதரவோடெனை யாள்புரிவாய்குகா சோதி

ந. மாலைமணந்தரு மாவைவயிலேவரு
சீலமிகுமுமை பாலகனேயொரு சோதி.

ச. ஆரலெனும்பெயர்த் தாரகையாறுதாய்
மாரதுநேசகு மாரதயாபரா சோதி.

---

வெண்பா.

அண்டர்களைக் காய்ந்த வசுரர்கிளை வேரறவேல்
கொண்டுதொலைத் திட்ட குமரவேள்—தொண்டனெனை
வாதைபுரி வல்வினைநோய் மாற்றி யருளவெனக்
காதரவுன் போலொர்துணை யார்.

இராகம் தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

12. ஆரேனக்குத் துணையயா—அந்த
அந்தரத்தோர் வந்துபணி
கந்தா நீயல்லாமல் வேறிங் ஆரேன.

அனுபல்லவி.

மாருதப்ரவல்லியந்த மாவதனமாறியுய்ந்த
மாவைநகர்க்கோவில்வந்த தேவா வுனைப்போற்றகுந்த ஆரென

சரணங்கள்.

க. ஆரணங்களேத்துதெய்வ வாரணப்பெண்மணாளனே
அந்தரங்கத்தைப்பரனுக் கருளியதயாளனே
பூருவவினைதொலைக்கும் புண்யபரிபாலனனே
பொன்மயின்மேலேறுமெங்க டன்மவடிவேலவனே ஆ,

உ. ஆண்டவபொன்னம்பலத்திற் றூண்டவஞ்செய்தருளிய
ஆலமிடற்றையனுக்குப் பாலசாவிவ்வையகத்தில்
பூண்டபவம்போக்கநித வேண்டுதமியேற்குனது
பொற்பதந்தராயேலருட் டற்பராநானென்னசெய்வேன் ஆ.

ங. முன்னோர்நாளிற்கிரவுஞ்சக் கன்மலைக்கீறெய்தவிட்ட
கொன்னவில்வேற்படையையிங் கின்னமொருதரத்திலென்
னின்னலென்னுமலைக்குவிட் டென்னைமகிழ்விக்கொணாதா
தன்னிகரில்லாததனிப் பன்னிருகையனேயினி ஆரென.

---

வெண்பா.

வேதனரிக் கெட்டா விழுப்பொருளே வல்வினையேன்
வேதனைநோய் நீக்கியருள் வேன்முருகா—பாதமிக
நம்பினருக் கேற்றசுக நல்குந் திருமாவை
யம்பதிவா ழாறுமுக வா.

இராகம் சங்கராபரணம், தாளம் மிஸ்ரம்

பல்லவி.

13. ஆறுமுகம்பன்னிருகரமோடேவருநாதா
நூறுமகந்தந்தவனருள்பெறவருடாதா ஆறு

அநுபல்லவி.

நான்முகனு மழியாவசுரரை
கொடியிறப்பாரு திமையோர்சிறை
விடுவித்திடு மெனையாடுரை ஆறு

சரணங்கள்.

க. அங்கைகூப்பி யடிபணியுமனைவரையும்
அரங்கைதமாற்றி யனுதினமுமருள்வோனே
தங்கவேற்படை தாங்கியகையோனே
தமியேனரை நொடியுந்துயர்
சகியேனிதோ வந்தாளுவை ஆறு.

உ. இறையைவேதத் திட்பொருள்சொல்லென்றோர்வன்
சிறையிலேவைத் தெனைவரையும்படைத்தோனே
மறைகள்தேடு மாமயில்வாகனு
மகிதலமதில் வருபவமினி
வாராதருள் தாராய்நனி ஆறு

ங. திங்கள்சூடுஞ் சிவசரவணோற்பவனே
தினமுமாவைச் சினகரநின்றருள்வோனே
கொங்குண்கோதைக்குஞ் சரிமணாளனே
கொணர்திடமெனன்றெனதுயிர்
கொண்டாலுமதின்றுள்பரம் ஆறு.

வெண்பா.

சீல மிகவெனையாட் செய்முருகா நீபமலர்
மாலை பசையு மணிமார்பா—ஞாலமிகப்
போற்றுந் திருமாவைப் புங்கவநீ யென்றுயர்நோய்
மாற்றும் மயில்வாக னு.

இயல்மெட்டு தாளம் ஆதி.

பல்லவி.

14. மயின்மீதினில் வருவாய்—வைவேலா
மயின்மீதினில் வருவாய்.

சரணங்கள்.

க. தயவாயொருதிருமா வையில்வாழ்துரையேவரந்
தருவாய் கிருபா கரனே மயின்.

உ. ஆலங்குடித்தபெரு மானன்றளித்தசுதா
அருமான் மருகா முருகா மயின்.

ங. ஈசன்றனக்குமறை பேசுமுனக்குமுறை
யிடுவே னிடரோ டிடவே மயின்.

ச. சூலம்பிடித்தயம தூதன்வருத்தும்போதுன்
றுணையா யுனதா ளினைதா மயின்.

---

கலித்துறை.

விண்ணாடு தீக்கிரை யாக்கிய சூரனை வேல்கொடதம்
பண்ணுறு மாமுக னைத்திரு மாவைப் பதியமருங்
கண்ணு யிரற்கருட் செய்முரு கையனைக் காணவெனக்
கெண்ணு யிரங்கண் படைத்தில னேயவ் விறையவனே.

இராகம் பியாகு　　　　　　　　　　　　தாளம் ஆதி.

பல்லவி.

15. கண்களிகூரவேன் ஸ்வாமி—யுனே
யெப்போது என்றுரையே.
யெப்போது என்குருவே
யெப்போது காண்பேனிப்பூமி　　　　கண்.

சரணங்கள்.

க. ஒண்கதிரொளிவிடு மொருவடிவேலா
உதிதாரிசமப தநீநடராஜா
ஓர்சுதனெனுமுரு கேசாசாமி　　　　கண்.

உ. சகிக்கருஞ்சுரர்சிறை தவிர்த்தொரனந்தந்
தயித்தியர்பொரவரைச் சனத்தில்வென்றிந்த்ரன்
றன்சுதைதனே மணந்தருள்சாமி　　　　கண்.

ங. மங்கலவாத்தியம் மறைநிறைதோத்ரம்
மறுவினேவேத்தியம் மாவைபம்க்ஷேத்திரம்
மந்திரமுறைந்தெனே யருள்சாமி　　　　கண்.

ச. புன்னகையோடருள் பொழிமுகமாறும்
பன்னிருகைமயிற் பவனியுலாவும்
இன்னருட்கோலமுமாக சாமி　　　　கண்.

---

வெண்பா.

தேவர்களின் றேவா திருமான் மருகாநன்
மாவைநகர்க் கோவில் வருமுருகா—யாவருக்குந்
தந்தையென வந்தெதையுந் தந்துபரி பாலிக்குங்
கந்தவுமை மைந்தவெனேக் கார்.

இராகம் அடாணு.　　　　　　　　　　　　தாளம் மிஸ்ரம்

பல்லவி.

16. முருகாவோருபோது முனேமறவேன்—குரு
மூர்த்தமாயிந்தமு கூர்த்தம்வந்தாளுவாய்　　　　முரு

அனுபல்லவி.

தருநிறைமாவைஸ் தலசிதமுறை
சண்முகனேகந்த சாமியுமைதந்த முரு.

சரணங்கள்.

௧. நீபமலர்ந்த நெடியமணியார்பா
நேர்ந்தவெஞ்சூரனைக் காய்ந்தகிர்பாகரா
கோபநிலையினின் குடியேற்று மீஸ்வரா
குன்றமெறிந்த குமரகுருபரா முரு,

௨. பஞ்சபூதியங்க ளஞ்சுபலேந்தாலும்
பாாதனிற்பிர பஞ்சத்திலேந்தாலும்
அஞ்சும்பொடங்கச னஞ்சவெதிர்த்தாலும்
ஆசாமியங்களாட் கொண்டுதடுத்தாலும் முரு.

௩. ஆறுமுகமுமீ ராறுவிழிகளும்
அம்புயமுங்குலி சாயுதமும்வேலும்
சீறுமயூரமுஞ் சேவலுமால்பெற்ற
செல்வியர்யேவுந்திருக் கோலங்கொண்டருள் முரு.

௪. தந்தையுந்தாயுந் தமருஞ்சகோதரர்
தாமுமித்தாரணி தன்னினீயேயன்றிச்
சாருந்துணைசள்வே றுமில்லையெங்கள்
தற்பரனேயோதுஞ் சத்தியமேயிது முரு.

---

கலித்துறை.

மேவற் புதவடி வேலுங் குலிசமும வெற்றிமிகுஞ்
சேவற் கொடியும் மயில்வா கனமுந் திகழ்தரநன்
மாவைப் பதியி லெழுந்தருண் மான்மரு காதமியேன்
பாவப் பிணிக்கொரு நீயேமருந் தென் பாக்கியமே.

இராகம் கமாஸ். தாளம் மிஸ்ரம்.

பல்லவி.

17. இந்தக்காயத்தை யேனுனக்கேன்னெஞ்சமே-வேலுக்
கிறைவன்றனை நிதமுந்துதி. இந்த.

அனுபல்லவி.

கொந்தவிழ்சோலை சூலவுநன் மாவையிற்
குடிகொண்டருள் குளகன்றிருவடிகண்டனவாதந்துதி-இ

சரணங்கள்.

க. பத்திருமாசங்கர்ப்பபைக்குள்ளிருக்கும்பொய்க்கூட்டம்-இந்தப்
பாருற்பவித்திட்டால் நாரிற்சுழல்பொம்மலாட்டம்
மித்தையெனுப்ரபஞ் சத்தைநம்பாதன்பின்
மிகவந்தெனையாளுங்கதிர் வேல்வேலெனநாளுந்துதி-இந்த.

உ. ஐம்புலமார்தருமென்பது பீற்றற்பைத்தோற்றம்—நம
தாக்கையிற்சுவாச மடங்கிப்போனாலூசனுற்றம்
அம்புவிவாழ்வதொ ரந்தரமின்போலென்
றகநின்றிகபரமுந்தரு மமலன்பதகமலம்பணி இந்த.

ங. கூற்றுவன்வந்துயி ரேற்றிடும்போதோதிண்டாட்டம்—மிகு
கூக்குரலோடுநாய்க் கூட்டநரிக்குக்கொண்டாட்டம்
ஈற்றில்யாதும்பய னில்லைநந்தில்லைவாழ்
இறைவன்சுதனெனையாளறு முகவன்பதநினைநாடோறும்-இ

---

கலித்துறை

வானுல காண்மக வானனை யாளவு மாயமலை
தானுறு தானவ ரோடற மாளவுந் தந்தவொரு
சானவி யாள்சுதன் மாவையில் வாழ்கந்த சாமியுனை
யானொரு போது மறவே னெனைவந் திரட்சிக்கவே.

இராகம் காம்போதி. தாளம் ஆதி.

பல்லவி.

18. முத்திதந்தருள்வாய்—கந்த
மூர்த்தியேயுனக்கு நிதந்
தோத்திரஞ்செய்வேனுன்பத முத்தி.

சரணங்கள்.

க. பத்தியுடன்பாவலர்பா டித்துதிக்குமாவையில்வாழ்
உத்தமமொய்ம்பிராறுள்ள வத்தாவுன்னாதாரமல்லால் [போல்
நித்தமுன்பாதத்தையன்பாய்த் துத்தியஞ்செய்வேனுக்குன்
இத்தலத்துண்டோவேறேத வெத்தலத்துக்குமோநாதா முத்.

உ. சிற்பரன்கண்ணுதல்வந்த தற்பராநீயருளாயேல்
இப்புவியிலரைநாழி தப்பியுயிர்வாழ்வதில்லை
அற்புதனேயாறுமுகத் துற்பவநான்மறைதேடு
நற்பொருளேகிரவுஞ்சக் கற்பகவேலெறிவேளே முத்தி.

ங. அஞ்சநடைக்கொஞ்சுகிளிக் குஞ்சரிமணாளாவுனைத்
தஞ்சமெனநாளும்வந்து கெஞ்சுகிறேனானுவந்து
கஞ்சனைச்சிறையில்வைத்த வஞ்சனக்கண்ணுமைபெற்ற
மஞ்சனேகுஞ்சரமுகத் தஞ்சுகரற்கிளையோனே முத்தி.

ச. அஞ்சுபுலமாறுமுனிக் கஞ்சிலொன்றின்மறைப்பொருள்
அஞ்சிலொன்றிற்கொடுத்ததாட் கஞ்சாவுனக்கடைக்கலம்
நெஞ்சிற்றனைவைத்துனது செஞ்சரணின்றலைவைத்துச்
சஞ்சிதபவங்கடொலைத் தஞ்சலென்றருள்வாயிக முத்தி.

---

வெண்பா.

பத்தியுட னாளும் பணிபுரியுந் தொண்டர்களைச்
சித்த மகிழ்ந்தளிக்குஞ் செவ்வேளே—யெத்திசையும்
வாசமிகுஞ் சோலைவளர் மாவையுறை வாய்தமியேற்
காசியுத வாறுமுக வா.

இராகம் தோடி. தாளம் ஆதி.

பல்லவி.

19. ஆசிதா என்னையாள்வே லாயுதா
ஆதிநாதா ஆசிதா.

சரணங்கள்.

க. ஆசிதாவீசா வருள்புரிவாசா
அன்புசெய்வாய்முருகேசா வதிநேசா ஆசிதா.

உ. வாசப்பூஞ்சோலை மாவைப்பொன்சாலை
வாசஞ்செய்வாய்கந்தவேளே வந்திவ்வேளை ஆசிதா.

ந. ஆலவாய்க்கரும்பா யலைவாயிற்றுரும்பா
யலைகிறேன்புவியினுன்வம்பாய் மனவன்பாய் ஆசிதா.

ச. வல்பிணிநோயால் வாடுகிறேனையான்
மனமுவந்தருள்புரிவாயே யென்னைநீயே ஆசிதா.

---

கலித்துறை

வேதாவைக் குட்டி வியன்சிறை யிட்டு விதித்ததரு
நாதா வுனைப்பணி யுந்தமி யேற்கொரு நல்லபிதா
மாதாவைப் போலநண் ஞானம் புகட்டி மகிழ்ந்துனது
பாதாம் புயமிது போதருள வாய்கிரு பாகரனே.

இராகம் சுருட்டி. தாளம் மீஸ்ரம்.

பல்லவி.

20. கருணைகொண்டேன்னைக் கார்கிர்பாகரா—உன்போற்
கால்பணிகிறேனேய்பிணிதீர கருணை.

சரணங்கள்.

க. சரணெனவனவரதமுமுனைத் தாமெனநிதமாளுமுக
தற்பரவதியற்புதசிவ புத்திரனெனுமுத்தமகுண கருணை.

ந. மரகதமணிமயில்வருமரி மருகா திருமுருகா துயர்
மங்கவிங்குவந்துள்ளம் ரங்குமெங்கள்சாமியே கருணை.

உ. வாரகமுலையாரெனுமயி ராவதமருள்மாதொடுகுற
மங்கைதங்குபங்கன்சுரர் பங்கமங்கவந்தாயே கருணை.

ச. மருமலரணிதருமெழின்மணி மார்பாசெகமாள்வாயுமை
மைந்தகந்தமாவையால யந்திகழ்ந்தவெந்தாயே கருணை.

---

வெண்பா.

சென்னிகளோ ராறுந் திகழ்விழியீ ராறுமருட்
பன்னிருகை வேலும் படைபிறவும்—மன்னுருற
மின்னுடனெய் வானைபுற மேவுதிருக் கோலமொடுன்
வன்னமயி லேறியென்முன் வா.

இராகம் பியாகு. தாளம் மிஸ்ரம்.

பல்லவி

21. வன்னமயி லேறியென்முன்னே
வருவாயென் ஸ்வாமி நீயே
யருள்வாயிப்பூமி வன்ன.

சரணம்

க. பொன்னொளிகாலு முன்னிருதாளைப்
போற்றுவேனென் வேளே
அன்னை தந்தையைப் போலுவக்கென்னை
யருள்வாயென் கோவே—வரந்
தருவாய் கண் பூவே வன்ன.

உ. பற்றலர்புரப் பாவகற்கிடும்
பரமகுமாரா
வுற்றவர்க்கருள் வெற்றிவேலாயுத
மோங்கியகையா—வெனக்
குதவிநீசெய்யாய் வன்ன.

ங. பண்ணவர்க்கிடர் பண்ணவுணர்க்குநீ
பாவித்தவேலே
பாவியேன்பவமீது மோர்முறை
பாவிக்கொணாதா—மாவைக்
கோவிற் கணுதா வன்ன.

ச. துய்யனேகந்த ஸ்வாமியேயுன்றன்
சுக்ரவாரத்தைச்
சொன்முறைதவ றுதனுட்டிக்குந்
தொண்டனைக்காரா—யுறுந்
துயர்களைத்தீராய் வன்ன.

வெண்பா.

அன்றமரர்க் காக வருஞ்சிறைமீட் டோர்சுடர்வேல்
குன்றுருவத் தொட்ட குருநாதா—இன்றென்னைச்
சார்துயர்நோய் பாவத் தனைகளறுத் தாளவெனக்
கார்துணைவே றாறுமுக வா.

ஜியமதறேமீறே. என்றபடி
பல்லவி

22. சோதிவடிவேன் முருகையனே நீதுணை
ஐயனேநீதுணை ஐயனேநீதுணை
ஐயனேநீதுணை ஐயனேநீதுணை சோதி

சரணம்

க. ஆதிபரமேசனி னன்புள்குமாராசாமி
ஐயாவெனையாட் செய்யாய்தினமே சோதி.

உ. தாரகையாறுதாய்மார் தந்தசரவணசாமி
தருவாயிகமும் பரமுமிகவே சோதி.

ங. கானக்குறவள்ளிதெய் வானைமணவாளாசாமி
கந்தாதிருப்பா தந்தாவிருப்பாய் சோதி.

ச. ஏறுமயிலேறிவந் தென்றுயரந்தீர்ப்பாய்சாமி
எயில்சூழ்திருமா வையின்மான்மருகா சோதி.

---

வெண்பா.

மாவைத் தலமமரு மான்மருகா வுன்னடியைப்
பூவைத் தனவரதம் போற்றுகிறேன்—சேவற்
கொடியோனே குன்றக் குறத்திமண வாளா
வடியேனைக் கார்முருகை யா.

இராகம் தோட்டி தாளம் மீஸ்ரம்.

பல்லவி.

23. ஏழையைக்கார் கண்பாரையா
கந்தசாமி நீயிவ் ஏழையைக்.

அநுபல்லவி.

வேளைக்கிரங்கும் விசாகாசராசரம்
மீதுற்றவெங்கள் மெய்யானபராபரம் ஏழையை.

சரணங்கள்.

க. நீடிப்ரபஞ்சம் பொல்லாதது
நிசமாயிக்காயம்
நீரிற்குமிழி நில்லாதது
தேடித்தீராரோகந் தீர்க்குங்கிர்பாகரஞ்
சேடத்ததிகாரஞ் செல்போதுன்றுபரம் ஏழையை.

உ. தேவரைச்சிறையின் மீண்டவா
நீயல்லதென்றுயரைத்
தீர்ப்பாரரென்னை யாண்டவா
ஏவரையுமிரட் சிக்குமொரேதேவா
ஏமனெனையணு காமல்வைத்தாள்ஜீவா ஏழையை.

௩. கோலப்பவானி பாலகா
மாவைக்கோவிற் கடவை
கோவில்கொண் டிருக்கும்வேலவா
ஆலத்தையுண்ட வரற்குமைந்தாமறை
மூலதனைக்கும்ப முனிக்குத்தந்ததுரை ஏழையை.

---

கலித்துறை

தேவர்க் குறுகண் செயுந்தா னவரைச் செயித்திமையோர்
கோவைச் சுயவின் குடியேற்றி வைத்த குகன்வடிவேற்
சேவற் கொடியு மயில்வா கனமுங் திகழ்தரானன்
மாவைத் தலநின் றருள்கந்த வேளை வழுத்துவமே.

இராகம் பியாகு. தாளம் ஆதி.

24. பல்லவி.

சாமியேயிப்போது தந்தருளுன்
றுளிணைப்போது சாமியே.

சரணங்கள்.

க. தோமில்வளமாவையிற் றுரையேயுனையாமென்றர்
தொழுவேனெனையருள் சுடர்வேலவனே சாமியே.

உ. குன்றுருவவேல்தொட்ட குமரகுருவேகுணக்
குன்றேயெனதக நின்றருள்குகனே சாமியே

௩. தோகைமயின்மேல்வரும் ஸ்வாமியென்னையுன்னடித்
தொண்டாய்வரவருள் கொண்டாள்பரனே சாமியே.

ச. நாதன்றனக்கோரும் போதம்புகட்டுங்குரு
நாதாவுனைவிட வேறுதாவார் சாமியே.

---

கலித்துறை

ஆல மயின்ற வரன்சுதன் கூற்ற னனுப்பவரும்
கால னெனையணு காமலெக் காலமுங் காக்குமலர்
மாலை திகழறு மாமுகன் மாய மலைக்குவிட்ட
வேலு மயிலுமுண் டேதமி யேற்கொரு மெய்த்துணையே.

இராகம் பியாகடை தாளம் மிஸ்ரம்

பல்லவி.

25. வேலுமயிலு மேன்
மேலுந்துணையல்லால்
வேறுந்துணைகளுண்டோ வேலு.

சரணங்கள்.

க. காலகாலன்பெற்ற கண்மணியேயுற்ற
கடுவினைபொடி படநொடிவரு
கந்தாவுமை மைந்தாவொரு வேலு.

உ. ஆர்கலியஞ்சவிண் ணோர்கலிமிஞ்சவெண்
ணறுமசுரர்க ளழிதரவயி
லெறிதருசிவ குருபரகுக வேலு.

௩. முண்டகமேலிருந் தண்டங்களைத்தந்த
மூவாமுழு முதல்வாவறு
மூகவாவெகு தயவாய்வரு வேலு.

௪. மூவர்முறைவரு மாவையுறைதரு
முருகாதிரு மருகாகதி
மூழ்கப்பவ மாளத்திதி வேலு.

வெண்பா.

ஆனைமுதற் சிற்றெறும்பீ றானவுயி ரத்தனைக்கும்
போனமளித் தென்றும் புரக்குமொரு—சானவியின்
மைந்தவெழின் மாவை வருமுருகா வென்றனையு
முய்ந்திடவாட் கொள்வா யுவந்து.

இராகம் தன்னியாசி தாளம் ஆதி.

பல்லவி.

26 அரிதிருமருகனின் றிருவடிமறவா
தன்பாயிருமனமே அரி.

அனுபல்லவி.

கரிசனையுடனன வரதமுமெனையா
ளொருதிருமுருகனென் றுலகெலாமடிதாழ் அரி.

சரணங்கள்.

௧. தருமதயாள தயாபரபோதன்
சனனமரணமறத் தவிர்த்திடும்பாதன்
பரமகுமாரனெ னும்ப்ரபுநாதன்
பாததொண்டுகள்பணித் தெதையுஞ்செய்நீதன் அரி,

௨. கற்பகவிடுமொரு கதிர்வடிவேலன்
கடியவினைகடோலைத் திடுமனுகூலன்
அற்பகறனைநினை யார்க்கொருகாலன்
அடிபணிந்தவர்களுக் கருளுஞ்சுசீலன் அரி.

௬. ஆதிபன்மதிமுத லமரருக்கீசன்
அசுரரைச்செயித்திமை யவர்க்கருணேசன்
ஓதருங்குறுமுனிக் கருளுபதேசன்
ஒப்பின்மாவையிலென்று முறையுஞ்சர்வேசன் ஆரி.

---

கலித்துறை.

ஆதர வுன்றிருப் பாதம லாதகி லந்தனில்வே
றேதுள தென்றுயர் தீவினை யாவது மிங்ககல
மாதய வாயெனை யாளறு மாமுக மாசில்வரம்
போதிது நீதரு வாய்திரு மாவையிற் புங்கவனே.

இராகம் கமாஸ். தாளம் ஆதி.

பல்லவி.

27. வா ஏறுமயின்மிசை யறுமுகவா
எளியேனுக்கிதோ வருடர
வா ஏறுமயின்மிசை யறுமுகவா

அநுபல்லவி.

கூறுமதில்கள்புடை குலவியமாவைநகர்க்
கோவில்வாழுமெங்கள் குமரகுருவேயிதோ வா.

சரணங்கள்.

௧. சேவலுயரமயின்மேவும்புனிதவடி வேலா வடிவேலா-வுன்றன்
றெரிசனமடைவதெத் தினமருள்புரியுமைபாலாவுமைபாலா
தேவர்க்கிடர்செய்தயித் தியரைச்செயித்தவரும்
தேவஞானகுண சீவதயாபரனே வா.

௨. பிறவிவெயிலினிளைப் பறவுன்பாதநிழல்தாராய்நிழல்தாரா—
யுன்றன்
பேசற்கரியபெருஞ் சாயுச்சியமெனுங்கதி சேராய்கதிசேராய்
மறைகள்புகழுமரு மானுதல்விழிதரு
மாசினேசமுரு கேசராசதுரை வா.

ங. பாசங்கலங்கமன நேசந்துலங்கவருள் வாயேயருள்வாடே—யுன்றன்
பதுமபீடிகையென் னிதயமாகக்கொள்ளு வாயேகொள்ளு
வாசக்கடம்பமர்பு யாசலனேதிகழ் வாயே
வாகைசூடியபெம் மானேவானவனே வா.

---

வெண்பா.

செச்சை யணியுந் திருமார்பா தேடினரை
யச்சமறக் காக்கு மருண்முருகா—முச்சகமுங்
கைகுவிக்கு மாவைநகர்க் கந்தாவென் றீவினையைக்
கொய்கதிர்வேற் கொண்டாள் குகா

இராகம் சுருட்டி தாளம் மீஸ்ரம்.

பல்லவி

28. தோகைமயின் மேலேறிவருகுவாய்
கந்தஸ்வாமி யுன்னைத்
துதிசெய்வேனுக்குன் பதவிதருகுவாய்.

அநுபல்லவி.

மாகமளவுமதில் கொண்மாவைப்பதி
வந்துமகிழ்ந்தரு ளெர்ந்தைசிவகுக
வந்தனமிகத் தந்தனன்பிரம்ம
வர்த்தக பர்வத பத்தினிமைந்தனே தோகை.

சரணங்கள்.

க. அடியவர்க்கிதங் கொடுக்குமிங்கிதலோலா
அண்டர் வேண்டிப்பணிய
வசுரரைத்தொலைத் தருளலங்கிர்தவேலா
முடியுடைத்தடங் கிரிதுளைத்தோனே
மூலகாரண னேகிருபாகர
மூர்த்தியேயருட் கார்த்திகேயநன்
முத்தமிழுத்தம வித்வசிரோன்மணி தோகை.

உ. குறுமுனிக்கருளிய திருமுருகேசா
குறமானைத் தழுவிக்
கொளமுன்னவனைக் கருதிபமயினேசா
குறைமதிபுனைந் தோன்மகனே புரு
கூதனை விண்குடி யேற்றிவைத்தவனு
கூலனேகுண சீலனேவண்ணக்
குன்றுதொழுமெங் குமரகுருபரா தோகை.

௩. மருமலர்வதிந் தருள்சரவணபவனே
குல்லைமாலையினாறு
மணங்கமழ்ந்தொளி விளங்குநீண்முடியினனே
சரிகமபதநீதருப் நாரதன்
றந்தமகந்தன்னில் வந்ததகருந்துஞ்
சாமியேதொட்ட நேமிதீரட்ட
தற்பரநித்ய தயாபரசண்முகா தோகை.

---

வெண்பா.

ஆரார்க்கும் பொல்லா வருந்தீ வினைநோயாற்
றீராத வெத்துயருந் தீருமே—நாரிதரு
மைந்தா மகத்வ வடிவேலா மாவைநகர்க்
கந்தா வெனத்தொழுதக் கால்.

இராகம் தசாவந்தி தாளம் ஆதி.

பல்லவி.

29. கந்தாவுனக்கோரபய முன்பாதரவிந்
தந்தாவெனக்கிச்சமயம் கந்தா.

அநுபல்லவி.

இந்தார்முடித்தசடை பைந்தானனத்தலுடை
மைந்தாவிண்டா வெயில்சூழுஞ் சந்தாரும்மாவையில் வாழும் - கந்.

சரணங்கள்.

க. குன்றுருவவேல்விடுத்தவா—அசுரர்குலங்
கொன்றுசுரர்க்கூர்கொடுத்தவா
என்றுமுனை நினையு மேழைக்கொருதுணையு
மில்லையிக்கார்ந்த மொழிகொடு
குல்லைத்தாரேந்திபொளிவிடு கந்தா.

உ. புள்ளிமயின் மேனடித்தவா—புல்லியகுற
வள்ளியைமணமுடித்தவா
வெள்ளிமலையுதித்த தெள்ளுமலைகுடித்த
வேலாவிளங்குசதங்கைக்
காலாபொன்னின்குலிசங்கைக் கந்தா.

ங. முன்பயனைச்சிறையிட்டவா—குறையிரந்த
பின்பானுக்காகவிட்டவா
அன்பொடேமைப்படைத்த வறுமுகவாறடைத்த
ஐயன்முன்பிரணவமருள்முரு
கையன் பன்னிருகரமொடுவரு கந்தா

---

கலித்துறை.

கந்தாவுன் றஞ்ச மென விரந்தாரைக் கருணைமிகத்
தந்தா தரிக்கு முருகா வுனைச்சர ணென்றுநிதம்
நொந்தா வலிக்குந் தமியேற் குறுதி நுவன்றிருபா
தந்தா வளமிகு மாவையில் வாழ்சிவ சண்முகனே.

(இந்திரசபாமெட்டு)
கண்ணிகள்.

30. சாமியிந்தத் தருணம்வந்துன் சரணமேதாராய்
சஞ்லந்தீர்த் தஞ்சலென்பாய் சரவணபவா க.

வாசநீப மாலைமார்பா மனமிரங்காயேல்
வையமேல்யா னுய்யவேறு வழியேதென்கோவே உ.

ஆறுமுகம் பன்னிருகை யபயவரத
மாகவந்த னுக்ரகஞ்செய் யாயனுரதம் ௩.

தெய்வலோகங் காத்தவேதா திபனேயென் றுதா
தீவினைவா ராமற்கார்தெய் வானைசமேதா ௪.

கதிர்வைவேலு மயிலுமேயென் கருத்திலுண்டையா
காதலாயுன் கதிதந்தாளக் கருதாய்கந்தையா ௫.

மங்கலமிர் தங்கமதிர் மாவையம்பதி
வாசமிர்த்த ராசபுத்ர வழங்குவேன் றுதி ௬.

---

கலித்துறை.

மேதா விபர்புக மூந்திரு மாவையின் மேவுகுரு
நாதா வகில சராசர மூந்தரு நற்கருணைத்
தாதா கடப்ப மலர்த்தொடை யாயுனைச் சந்ததமும்
பாதார விந்தம் பணிவே னெனைப்பரி பாலிக்கவே.

இராகம் காபி. தாளம் மீஸ்ரம்.

பல்லவி

31 நெஞ்சேநிதந்துதி யுன்றன்
நேசன்றிருமுரு கேசன்றருங்கதி நெஞ்சே.

அநுபல்லவி.

நஞ்சணிகண்டற்க ருஞ்சுதன் தொண்டர்க்கஞ்
ஞ[illegible]ற்றுமெய்ஞ் ஞானவரோதயன் நெஞ்சே.

சரணங்கள்.

௧. அந்தவரியும யனும்பதுங்கிட
ஆநம்விண்ணோர்சள ருஞ்சிறைக்குட்பட
ஆணைசெய்சூரனழியச் சமரில்வென்
றுயிரங்கண்ணனவிண் ணுள்வைத்தபரன் நெஞ்சே.

உ. கங்கைகுமாரன் கடம்பமர்மார்பினன்
கார்த்திகைபாலன்கண் கண்டபராபரன்
மங்கையுமைக்கு மகன்றிருமால்பெற்ற
வள்ளிதெய்வானைக்கு வாய்த்தமணவாளன் நெஞ்சே.

ரு. உன்னதமான வொளிகொள்வடிவேலன்
ஓங்கியசேவ லொடுமயில்வாகனன்
பன்னிருமொய்ம்பு படைத்தவறுமுகன்
பாரினின்மாவைப் பதியிலுறைகுகன் நெஞ்சே.

---

வெண்பா.

ஆறு முகவா வடியேன் படுதுயரைக்
கோறல் புரிவாய் குருநாதா—மாறில்
திருமாவைக் கோவிற் றிருமுருகா நாயேன்
கருமாளத் தாவுன் கழல்.

இராகம் தசாவந்தி. தாளம் ஆதி.

பல்லவி.

32. கந்தாவிரக்க மில்லையோ
மாவையில் வாழுங்
கந்தாவிரக்க மில்லையோ.

அநுபல்லவி.

கந்தாதிருவுளம கிழ்ந்தாருள்மிகச்சி
றந்தாதரித்திடர்தீர்நதி
மைந்தாமதித்தருளாய்கதி கந்தா.

சரணங்கள்.

க. உம்பராரையுந் தேடாமலே—தினமுமுனை
நம்பினேனைக் கைவிடாமலே
நம்பரா விசாகாநித நம்பினர் சகாயாநீப
நாறும்புயா சலனேமயி
லேறும் வேலாயுதனேயருள் கந்தா.

உ. தீதாரனந்த மவதா—ரமுமறுத்தன்
பாததாரவிந்த நிழல்தா
வேதாதிபகாருண்ய நாதாதிசயபுண்ய
வேளேவின் ேேணாரசேபெரு
மாளேயென் னேசதயாபர கந்தா.

ந. குற்றமகார் செய்தாராயினும்—பெற்றூரருந்தம்
பற்றைவிடா ரொருபோதிலும்
சிற்றடியேனென்னபிழை செய்யினும் பொறுத்தென்னுள்ளே
சீர்ஞானந் தந்தருளரிமரு
காநீவுக்தென்றுயர் பரிகரி கந்தா.

---

வெண்பா.

வானோர் சிறைமீள மாயமலே யேசடவுணச்
சேனேயெலா மாளச் செயித்தவடி—வேனுதா
வென்னேநிதந் தற்காத் திரட்சிப்பாய் மாவையினின்
றின்னறவிர்த் தாளீஸ் வரா.

இராகம் இந்துஸ்தான்மெட்டு தாளம் ஆதி.

பல்லவி.

33. மாமயிலேறிமுன் பாய்வருவாயணி
மாவையிலேயென்றும் வாழ்முருகேசா மாமயி.

சரணங்கள்.

க. தேமொழிவள்ளிதெய் வானைசமேதா
சித்தமிரங்குமே ஜெகநாதா
பூமலர்ப்பாதம் போற்றுவனனிதோர்
பொல்லாநோய்தீர நல்லருட்செய்குவாய் மாமயி.

உ. தொண்டர்கட்குரிய சுகமருட்புரியும்
துய்யனேபன்னிரு கையோனே
அண்டருக்கரிய வருட்பெருந்துரையே
அடிபணியுநாயேற் கருட்புரிகுவாயே மாமயி.

௩. மாமறைநூலா மகத்வசெங்கோலா
மகபதிக்கருள்புண்ய வடிவேலா
தாமதமாகா தோர்தமியேற்குன்
றயைகிடைக்கவேணுஞ் சாமியுன்னடைக்கலம் மாமயி.

௪. பாரினிலேதமி யேனுறுமாதுயர்
பாராயோ வினைதீராயோ
காரணனேபரி பூர்ணனேதிருக்
கார்த்திகே யாவுன்னை யேத்துவேனுன்வன்ன மாமயி.

---

வெண்பா.

பாலசுப்ர மண்யன் பகவான் திருமாவை
யாலயத்தி னின்றருளெம் மாறுமுகன்—வேலும்
மயிலுந் தமியேன் மனதிருக்க வெந்தத்
துயருந் தொடுமோ வெனை.

"சாமியேயின்னுஞ் சாலஞ்செய்வதழகா" என்றபடி.

பல்லவி.

34. ஐயாமுரு காவுன்திருவடிக்
கபயம் ஐயா.

அநுபல்லவி.

வையமெலாம் போற்றும் ஸ்வாமி, வந்தென்றுயர்மாற்றுந்தேவா
மந்தாகினி மைந்தா மாவைக் கந்தஸ்வாமியே ஐயா.

சரணங்கள்.

௧. தன்னிகரில்லாதவொண் பொன்னரிமாலைமார்பவுன்
தஞ்சமலால்வேறேதுண் டஞ்சுறேனுனைக்கொண்டஞ்
சாதேயென்றவாக்காலெனை யாற்றலாகாதா ஐயா.

௨. ஆதிசிவன்பாலகா ஆறுமுகவேலாவுன்
ஆதரவுபோதும்வே றூர்தரவிங்கேனுமெனை
யாற்றிமிகத்தேற்றித்துயர் மாற்றியருள்வாய் ஐயா.

௩. வன்மமென்னவென்னுடன் வன்னமயின்மேற்சணம்
வாருமென்னைக்காருமெந்தன் வாக்கில்மனஞ்சாரும்
பாருமருள் கூருமெந்தன் பாவந்தீருமே. ஐய

வெண்பா.

கருணை மிகப்பழுக்குங் கதிர்வேற் கடப்ப
மருமலர்ப்பைந் தாரசையு மார்பா—சரவசரந்
தந்த வறுமுகவா தாவறுநன் மாவைநகர்ச்
சிந்துதரு மைந்தவருட் செய்.

("கழுகுமலைக்குநாம் நேராய்" என்றபடி)

பல்லவி.

35. அருள்புரிந் தென்னையாளீசா நாமேலா
மார்வமுடன் தொழும் மாவைவாசா அரு

அநுபல்லவி.

அரியயனுஞ் சுரரும் மறியாதவிர் பாகரனே நல்ல அருள

சரணம்

கார்மயிலேறுங் கடப்பமலர்த்தாரா
கண்டகரைப்போரில் வென்றஅதிசூரா
சீர்மருவுந் தொண்டர்க்கோர்நல்லுபகாரா
தீர்தரநோயிதுபூமி தெய்வதமாதெனுநாமி
காதலனந்தரியாமி காத்துக்கொள்ளுங்கந்தசாமி அ

வெண்பா.

ஒன்றான மெய்ப்பொருளே யுத்தமவிண் ணப்பமிக
நன்றாகச் செய்தனக்கு நான்றருவேன்—குன்றுருவத்
தொட்டவே லைத்தமியேன் துன்பமலைக் கின்றெருக
விட்டெனையாட் கொள்வாய் விரைந்து

கீர்த்தனங்கள் முற்றிற்று.